# வலிப்பு நோய்! அறிவோம் தெளிவோம் -1

மரு. அ. வேணி, M.D., DM (Neuro) மூளை நரம்பியல் நிபுணர்
ராக்ஃபோர்ட், நரம்பியல் மையம்
தொடர்புக்கு 0431-2742121, 75980 01010, 80564 01010

Tamil Psychiatry Journal, Vol. I, Issue - 2, July - September 2025, Page 24 - 25

நம் உடல் உறுப்புகளை இயக்கும் மூலவரான மூளையைப் பற்றிய விழிப்புணர்வும் தெளிவும் அவசியமாகும். இன்று உள்ள எல்லா அறிவியல் அதிசயங்களும் விஞ்ஞானிகளின் மூளைத் திறனால் தான் உருவாக்கப்பட்டது. நாம் நமது மூளையின் ஆற்றலில் 5 – 10 விழுக்காடு மட்டுமே பயன்படுத்துகிறோம். மீதமுள்ள 90–95 விழுக்காடு தூண்டப்படாமல் தூங்கிய நிலையிலேயே உள்ளது. நம் மூளையின் ஒரு சில பகுதிகளைத் தூண்டுவதன் மூலம் இந்த 5 விழுக்காட்டை, 30 விழுக்காடாக மாற்ற முடியும், 80 விழுக்காடாகவும் மாற்றக் கூடிய அளப்பரிய ஆற்றல் நம் மூளையில் உள்ளது. ஒரு தீபத்தைத் தூண்டுவதன் மூலம் அது சுடர்விட்டு எரிவது போல் நாமும் நமது மூளையைத் தேவையான நேரத்தில் தூண்டியும், அமைதிப்படுத்தியும் வாழ்க்கையை வளமோடு வாழமுடியும்.

இக்கட்டுரையில் வலிப்பு நோய் என்றால் என்ன? அதன் அறிகுறிகள் எவ்வாறு வரும். வந்தால் என்ன செய்ய வேண்டும், எதனால் வருகிறது என்பன போன்ற பல முக்கிய தகவல்களைப் பற்றி பகிர்ந்து கொள்ள உள்ளேன். வலிப்பு நோய் பற்றிய பல்வேறு தவறான கருத்துகள் நமது சமுதாயத்தில் உள்ளன. இது பாவம் செய்தவர்களுக்கு மட்டுமே வரும் நோய் என்றும், இந்த நோய் உள்ளவர்கள் திருமணம் செய்து கொள்ள கூடாது என்றும், மக்களிடையே பரவலான கருத்துகள் உள்ளன. இன்னும் நமது தமிழ்நாட்டில் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டவரை பேய், பிசாசு மற்றும் கருப்பு பிடித்து விட்டது என்றும், பில்லி சூன்யம் வைப்பதால்தான் வருகிறது என்றும் நினைத்து பூசாரியிடம் அழைத்துச் சென்று வேப்பிலை அடிப்பதை வழக்கமாக வைத்திருக்கிறார்கள்.

எனவே நமது சமுதாயத்தில் வலிப்பு நோய் பற்றிய அறியாமை விலகி மக்கள் தெளிவு பெறுவதற்காக அவர்களிடம் வலிப்பு நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது இன்றியமையாததாகிறது. இக்கட்டுரையில் முதலில் வலிப்பு நோய் ஏன் வருகிறது? என்பது பற்றி பார்ப்போம்.

### வலிப்பு நோய் - ஏன் வருகிறது?

நமது உடலில் உள்ள உறுப்புகள் பாதிக்கப்பட்டால் ஒரு சில அறிகுறிகள் வெளிப்படும் என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான். உதாரணத்திற்கு இதயம் பாதித்தால் மார்பு வலியும், நுரையீரல் பாதித்தால் இருமல், சளியும் வருவது போல மூளை பாதித்தால் வரும் அறிகுறியே வலிப்பு நோய். இது வருவதற்கு முக்கிய காரணம் மூளையின் மேற்பரப்பில் (Graymatter) ஏற்படுகின்ற அபரிமிதமான கட்டுப்பாட்டை மீறிய மின்சார பாய்ச்சல் ஆகும்.

ஏன் இந்த மின்சார பாய்ச்சல் (எரிச்சல்) வருகிறது? என்று நீங்கள் சிந்திப்பது எனக்குத் தெரிகிறது. இதை நீங்கள் புரிந்து கொள்ள ஒருசில தகவல்களை நான் இங்கே பகிர்ந்து கொள்கிறேன். மூளையின் செயல்பாடு அதில் உள்ள இரண்டு வகையான இரசாயனப் பொருட்களினால் கட்டுப்படுத்தப்படுகிறது.

1. மூளையைத் தூண்டச் செய்யும் வேதியற் பொருள் (Neurotransmitter) - Glutamate

2. மூளையின் செயல்பாட்டைத் தடுக்கும் வேதியற் பொருள் (Neurotransmitter) GABA

நாம் எப்படி மின்சாரத்தை பார்க்க முடியாதோ அதேபோல் இந்த வேதியியற் பொருட்களையும் நம்மால் பார்க்க முடியாது. ஆனால் அதை உணர முடியும். உங்கள் கண் முன்னால் தராகத் தட்டை கொண்டு வாருங்கள். அதில் ஒரு தட்டில் தூண்டுதல் தன்மைக்காண வேதியியற் பொருள் இருப்பதாகவும். மற்றொன்றில் தடுப்புத் தன்மையுள்ள வேதியியற் பொருள் இருப்பதாகவும் கற்பனை செய்யுங்கள். இவை இரண்டும் நம் மூளையினுள் ஒரு சிறப்பான

சமநிலையில் இருக்க வேண்டும். இந்த சமநிலை பாதிக்கப்பட்டால் வலிப்பு நோயாக வெளிப்படுகிறது. அது மட்டுமல்ல இந்த வேதியியற் பொருட்கள்தான் நம் ஞாபகத்திறனுக்கு, மகிழ்ச்சிக்கு, கை–கால் அசைவு மற்றும் இயக்கம் போன்ற பல முக்கிய மூளையின் செயல்பாட்டிற்கு ஆதாரமாகும்.

இந்த வேதியியற் பொருட்களில் மாற்றங்கள் ஏற்படுவதால் சில நேரங்களில் தூண்டுதல் தன்மை அதிகரித்து அல்லது தடுக்கும் தன்மை குறைந்து, நம் மூளைக்குள் மின்சார பாய்ச்சல் ஏற்படுகிறது. அதாவது சிறப்பான சமநிலை பாதித்து மூளையின் செயல்பாட்டில் மாற்றம் (எரிச்சல் ஏற்பட்டு வலிப்பு நோயாக வெளிப்படுகிறது). வலிப்பு என்பது காய்ச்சல், தலைவலி போன்று ஓர் அறிகுறிதான். வலிப்பு ஏற்பட்டால் ஏதனால் ஏற்பட்டது? மூளையின் எந்த பகுதி பாதிக்கப்பட்டது? என்பதை கண்டறிந்து அதற்கான சிகிச்சை முறையை பின்பற்ற வேண்டும்: அப்போதுதான் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்ட ஒருவரை குணப்படுத்த முடியும்.